செ.வெ.எண்:39 நாள்: 22.06.2019

**அரியலூர் மாவட்டத்தில் வருவாய் கிராமங்களுக்கான ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) 25.06.2019 அன்று நான்காம் நாள் நடைபெறும் இடங்கள்.**

அரியலூர் மாவட்டத்தில் வருவாய் கிராமங்களுக்கான **ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) 25.06.2019** அன்று கீழ்கண்டவாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**உடையார்பாளையம் வட்டத்தில் ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில்** நடைபெறும். இவற்றில் **25.06.2019** அன்று **உடையார்பாளையம்** உள்வட்டத்திற்குட்பட்ட தேவாமங்கலம், அங்கராயநல்லூர் (மேல்பாகம்), அங்கராயநல்லூர் (கீழ்பாகம்), சூரியமணல் (குணமங்கலம்), கச்சிபெருமாள் (துளாரங்குறிச்சி உட்பட), இடையார் (ஏந்தல், தூங்கான் உட்பட), வாணதிரையான்பட்டினம், பிலிச்சிக்குழி (ஒக்கநத்தம், காங்கேயன்குறிச்சி உட்பட), உடையார்பாளையம் (மேற்கு), உடையார்பாளையம் (கிழக்கு), தா.சோழங்குறிச்சி (வடக்கு), தா.சோழங்குறிச்சி (தெற்கு), தத்தனூர் (மேற்கு), தத்தனூர் (கிழக்கு) ஆகிய வருவாய் கிராமங்களுக்கும் **ஜமாபந்தி** நடைபெறும்.

**அரியலூர் வட்டத்தில் ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில்** நடைபெறும். இவற்றில் **25.06.2019** அன்று **திருமானூர்** உள்வட்டத்திற்குட்பட்ட கோவில்எசனை (மேற்கு), கோவில்எசனை (கிழக்கு), உலந்தகூடம், குலமாணிக்கம் (மேற்கு), குலமாணிக்கம் (கிழக்கு), கண்டிராதீர்த்தம், திருமழப்பாடி, அன்னிமங்கலம், மஞ்சமேடு, திருமானூர், வடுகபாளையம் ஆகிய வருவாய் கிராமங்களுக்கும் ஜமபந்தி நடைபெறும்.

எனவே, பொதுமக்கள் இந்த ஜமாபந்திகளில் பட்டாமாறுதல், பெயர் மாறுதல், நிலஅளவை, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட தனிப்பட்ட கோரிக்கை மற்றும் பொதுவான கோரிக்கை மனுக்களை அளித்து உடனடி தீர்வுகாணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**